மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மின்சார அடுப்பு உருவாக்கப்படுகிற காலத்தில் பொதுமக்கள் அதனுடைய பயனை உணர்ந்து விடுவார்கள் என்று நான் நம்பிக்கொண்டு இருக்கிறேன் . இன்னும் சில ஆண்டுகள் போனால் மத மூட நம்பிக்கைகள் மெல்ல மெல்ல ஒழியும் போது, எரிக்கப்படுகிற உடம்பின் எலும்பு தேவை இல்லை என்று எண்ணுகிற நிலைமை வரும். சிலர் மத அடிப்படையில் வேண்டாம் என்று சொன்னாலும், பெரும் பாலான சாதாரண மக்கள் அதன் பயனை உணர்ந்து அதை எதிர்க்க மாட்டார்கள். எனவே, நாடு வளர்ச்சி பெறும்போது அதைப்பற்றிய திட்டத்தையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, சென்னையில் மாம்பலத்திற்குப் பக்கத்தில் கண்ணம்மாபேட்டை அருகே ஒரு கட்டிடம் கட்டி மின்சாரப் பொறி பொருத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே மக்கள் பிணத்தைக் கொளுத்துகிறார்கள். அங்கே மின்சார இணைப்புக் கொடுத்து கொளுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இது தனிக் கேள்விக்கு உரியது மட்டுமல்ல, கேள்வி போட வேண்டிய இடமும் வேறு.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இன்று சென்னை போன்ற பெரிய நகரங்களில் பிணங்களைப் பலர் புதைத்து வருகிறார் கள். இந்தப் பிணத்தைப் புதைப்பதற்கு பல இடங்களில் இடுகாடு கள் இருக்கின்றன. இந்த இடுகாடுகளில் வீடு கட்டிவிடுகிறார்கள். குடிசைப்போட்டு விடுகிறார்கள் என்று புகார் வருகிறது. இவற்றைத் தடுப்பதற்காக பிணங்களை எரிக்க மின்சாரப் பொறி ஏற்படுத்தி எல்லாவற்றையும் ஒரே இடத்தில் கொண்டு வந்து எரிப்பதற்கான வசதி செய்து தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் கூட மாநகராட்சி மன்றத்தின் கருத்தையும், பொருளா தாரத்தையும் பொருத்ததாகும்.

Mini Primary Health Centres.

* 450 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to open a number of Mini Primary Health Centres in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

@ 628-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1971 ஜூலை 26]

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் 2,000 குடும்பங்கள் அல்லது 10,000 மக்கள் கொண்ட இடங்களில் மினி பிரைமிரி சென்டர் அமைக்கப்படும் என்றும், ஒரு குடும்பத்திற்கு 50 பைசா ஒரு மாதத்திற்கு என்றும், ரூ. 1 என்றும் ஒரு முறை இருக்கிறது. இந்த மாதிரி மினி சென்டர்கள் ஆங்காங்கே குறிப்பிடப்பட்ட இடத்தில் தான் இருக்கிறதா அல்லது தமிழகத்தில் எந்தெந்த இடத்தில் இம்மாதிரியான சென்டர்கள் அமைப்பதாக ஆலோசனை இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : குறிப்பிட்ட இடத்திலே ஏற்படுத்தப்பட்ட மருந்தகங்கள் வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் ஆர்கனைசேஷனல் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு நல்குகிறது. இந்த மினி ஹெல்த் சர்வீஸ் சென்டர்கள் பரவலாக ஏற்படுத்தப்படும். நகரப் பகுதிகளில், பெரிய மருந்தகங்கள் இருந்தாலும், மக்கள் சுகாதாரத்தைப் பொறுத்து, அந்தந்த நகர் பகுதிகளில் இப்படிப்பட்ட அமைப்பு ஏற்படுத்த வேண்டுமென்று நான் பலரை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, ஒவ்வொரு வளர்ச்சி வட்டத்திற்கும் ஒவ்வொரு சுகாதார நிலையம் அமைப்பது பொருத்த மாக இருக்கும். அதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 374 பஞ்சாயத்து யூனியனிலே இப்போது ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. 130—140 இடங்களில் பஞ்சாயத்து யூனியன் கட்டிடங்களில் இருக்கிறது அரசாங்கத்தின் சார்பிலும் கட்டிடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. மற்ற இடங்களில் வாடகைக் கட்டிடங்களில் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஒவ்வொரு வட்டாரத்திலும் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த ஆரம்பச் சுகாதார நிலையங் முு.ப.
களை லாட்டரி சீட்டுப் பணத்திலிருந்து அமைப்பது என்ற செய்தி 9 30.
வந்தது. அப்படி நியமிக்கும் போது, மிக பிற்படுத்தப்பட்ட, அத்யா வசியமான இடங்களில் முதலிலே அமைக்கலாம் என்று அரசாங்கம் கருதுமா? அப்படி அமைப்பதானல், பாலமலை என்ற இடத்தில் மலைவாசிகள் வாழும் இடத்தில் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வி மினி ஹெல்த் சென்டர் பற்றியது. ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஒரு ஒன்றியத் திற்கு ஒன்று என்று ஏற்றுக்கொள்ளப் பட்டு, பஞ்சாயத்து குறிப் பிட்ட இடத்தில், குறிப்பிட்ட ஊரில், அவர்கள் கொடுக்கும் முன் பணத்தையும், இடத்திலும், அரசாங்கம் அதிகமாக ஒரு லட்ச ரூபாய் போட்டு, அந்தத் திட்டம் பூரணமாக நிறைவேற்றியதற்குப் பிறகு அரசாங்கமே மருத்துவ மனையை நடத்த வேண்டுமா என்பது ஆலோசிக்கப்பட முடியும்.

திரு. சொ. காவேரி மணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பெரும்பாலும், அலோபதிக் வைத்திய மருந்துக்கள் தான் கொடுக்கப்படுகின்றன. சித்த வைத்திய மருந்துகளும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆங்காங்கே அமைக்கப்படுகிற நிலையங்களில் அலோபதிக் டாக்டர்கள், எம்.பி.பி.எஸ். பாஸ் செய்தவர்கள் மருத்துவர்களாக நியமிக்கப்படுவதால், அலோபதிக் மருந்துகளைக் கொடுக்கிறார்கள். சித்த மருத்துவர்கள் நியமிக்கப்படும் நிலை ஏற்பட்டால், அதைப் பற்றிச் சிந்திக்கலாம். அலோபதிக் டாக்டர் மூலம் சித்த மருந்துக் களைக் கொடுப்பது முறையாகாது.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரதம மருத்துவ மனைகளுக்கு நிதி போதவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதை அதிகப்படுத்த முடியுமா என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நிதி போதவில்லை என்ற கருத்து இல்லை. ஏற்கனவே தரப்பட்ட நிதியைவிட, அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அதிகமாக இருப்பதால், போதுமானதாக இருக்கும் என்று நம்புகிறேன். எந்த மருந்தகத்திலும் தவறான வழியில் மருந்துக்கள் போகாமல், முறையாகச் செய்யப்பட்டால் பெரும் அளவுக்கு நிறைவு காணலாம் என்று நம்புகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, certain Panchayat Unions are very big and the population is also huge and one Primary Health Centre is not sufficient in such Unions. So, in such Unions will the Government sactio oe more Primary Health Centre?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது பொருளாதார நிலையில் இடம் பெற்று ஆலோசிக்கப் படவேண்டிய ஒன்று.

Public Relations Officers.

*438 *Q.*—THIRU S. DURAISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) number of Regional Public Relations Officers appointed in the State;

(*b*) the duties and responsibilities attached to the post; and

(*c*) whether there is any proposal to appoint such officers in each district?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) எட்டு.

(ஆ) ஒரு குறிப்பு @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

(இ) இல்லை.

@ 628–630-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.